பக்கங்கள் 16+ 03

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஐப்பசி 27 வியாழக்கிழமை 13.11.2025 | அதிர்வு 107

## திருலையில் கோர விபத்து
## இளைஞர் ஒருவர் பரிதாப மரணம்!




(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை, ஹொரவ் பொத்தானை பிரதான வீதியில் இன்று தனியார் பஸ்ஸூடன் மோட்

04

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



## தமிழருக்கான தீர்வு தொடர்பில்
# சுமந்திரனுடன் பிரான்ஸ் தூதுவர் இன்று நீண்ட நேரம் உரையாடல்

தமிழ் மக்களின் அபிலாஷைகள் மற்றும் அரசியல் தீர்வு தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரனை இன்று நேரில் சந்தித்து இலங்கைக்கான பிரான்ஸ் நாட்டுத் தூதுவர் நீண்ட நேரம் கலந்துரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பு சுமந்திரனின் அலுவலகத்தில் இன்று மதியம் நடைபெற்றுள்ளது.

04

# சட்டவிரோதமான முறையில் படகு மூலம் தமிழகம் சென்ற மன்னார் வாசி கைது!

(மன்னார் நிருபர்)

சட்டவிரோதமான முறையில் மன்னாரில் இருந்து படகு மூலம் தனுஷ்கோடி – அரிச்சல்முனை பகுதியைச் சென்றடைந்த குடும்பஸ்தர் ஒருவர் இன்று வியாழக்கிழமை காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

தனுஷ்கோடி – அரிச்சல்முனை கடற்கரைப் பகுதியில் இன்று காலை மரைன் பொலிஸார் ரோந்துப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது கடற்கரையில் சந்தேகத்துக்

04





# யாழ். வந்தார் தொல்.திருமாவளவன்

(எஸ்.நிதர்ஷன்)

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் இன்று யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்துள்ளார்.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக வருகை தந்த தொல். திருமாவளவனைத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் வரவேற்றார்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் வடக்கு மாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு நடத்துகின்ற “கார்த்திகை வாசம்“ மலர்க்கண்காட்சி யாழ். நல்லூர் கிட்டு பூங்காவில் (சங்கிலியன் பூங்கா) நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இதன் தொடக்க விழாவில் கௌரவ விருந்தினராகக் கலந்துகொள்வதற்காகத் தொல்.திருமாவளவன் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு தொல். திருமாவளவன் இன்று முள்ளிவாய்க்காலுக்கும் சென்று அஞ்சலி செலுத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது.








# யாழ். பல்கலை நிர்வாகச் செயல்களில் நான் ஒருபோதும் தலையிட்டதில்லை!

## தேசிய மக்கள் சக்தியின் எம்.பி. ரஜீவன் அறிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

"யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நிரந்தர நியமனங்கள் கிடைப்பதற்காக நான் குரல் கொடுத்தேன். ஆனால், நியமனங்களை நான் யாருக்காகவும் கோரியதில்லை. இது தேசிய மக்கள் சக்தியின் கொள்கைக்கும் நடைமுறைக்கும் முரணானது."

– இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதில் அரச தரப்பு எம்.பி. ஒருவர், தனது அறிவுறுத்தல்களுக்கு அமைவாகவும், தன்னுடைய அனுமதியுடனுமே நியமனங்களை மேற்கொள்ள வேண்டும் என்று நிர்வாகத்துக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றார் என்று ஊடகங்களில் வெளியான செய்திக்கு மறுப்புத் தெரிவித்து, நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி இன்று வெளியிட்டுள்ள அறிக்கையிலையே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

"கல்வி அமைச்சின் கல்வி அமைச்சு சார் ஆலோசனைக் குழு உறுப்பினராகவும், உயர்கல்விக்கான உபகுழு உறுப்பினராகவும், மேலும் யாழ்ப்பாணம் மாவட்ட கல்விக்குப் பொறுப்பான நாடாளுமன்ற உறுப்பினராகவும் நான் செயற்பட்டு வருகின்றேன்.

2025 செப்டெம்பர் 12ஆம் திகதி காலை 10.30 மணிக்கு நாடாளுமன்றத்தில் நடைபெற்ற உயர்கல்வி உப குழு கூட்டத்தில், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் கல்விசாரா ஊழியர்கள் நியமனம் இதுவரை மேற்கொள்ளப்படாததற்கான காரணத்தைக் கேட்டேன்.



மேலும், அவை உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என வலியுறுத்தினேன். அந்தக் கூட்டத்தில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக துணைவேந்தரும் கலந்துகொண்டிருந்தார்.

அதனைத் தொடர்ந்து, 2025 ஒக்டோபர் 28ஆம் திகதி யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் நடத்திய போராட்டத்திலும் கலந்துகொண்டு, அவர்களின் கோரிக்கைகள் குறித்த தகவல்களை நேரடியாக அறிந்தேன்.

உடனடியாகக் கல்வி அமைச்சர், கல்வி அமைச்சின் செயலாளர், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் கல்வி அமைச்சு சாரா ஆலோசனைக்குழுவுக்கு ஒரு மோஷன் எழுதியும் அனுப்பியிருந்தேன்.

உயர்கல்வி உப குழுவின் தலைவர் பிரதிக் கல்வி அமைச்சர் மதுர செனவி என்னுடன் கலந்துரையாடி, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துக்கான ஆளணி நியமனம் தொடர்பாக விரைவில் கூட்டம் நடத்துவோம் என உறுதியளித்துள்ளார்.

எனவே, கல்விக்குப் பொறுப்பான நாடாளுமன்ற உறுப்பினராக, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நிரந்தர நியமனங்கள் கிடைப்பதற்காக மட்டுமே நான் செயற்பட்டு வருகின்றேன் என்பதைத் தெளிவாகக் குறிப்பிட விரும்புகின்றேன்.

நான் ஒருபோதும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் நிர்வாகச் செயல்களில் தலையிட்டதில்லை. மேலும் எந்த நியமனங்களையும் யாருக்காகக் கோரியதும் இல்லை. இது தேசிய மக்கள் சக்தியின் கொள்கைக்கும் நடைமுறைக்கும் முரணானது.

இந்தச் செய்தி உண்மையை மறைத்து ஒரு பிழையை மூடிமறைக்கத் திட்டமிட்ட ஒரு குழுவினரால் பரப்பப்பட்ட தவறான தகவல் என்பதில் எனக்கு எந்த ஐயமும் இல்லை.

இதில் தொடர்புடையவர்கள் விரைவில் அம்பலப்படுத்தப்படுவார்கள் என்பதையும் பொறுப்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்." – என்றுள்ளது.

## வவுனியாவில் பொலிஸார் விசேட நடவடிக்கை

# போதை மாத்திரைகளுடன் நான்கு இளைஞர்கள் கைது!

**(கி.வசந்தன்)**

போதை மாத்திரைகளுடன் வவுனியாவில் நான்கு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார் இன்று தெரிவித்தனர்.

வவுனியா மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸாருக்குக் கிடைத்த விசேட தகவலையடுத்து வவுனியாவின் பல்வேறு இடங்ளில் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையின் போது 4 இளைஞர்கள் போதை மாத்திரைகளுடன் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களிடம் இருந்து 150 போதை மாத்திரைகளும் மீட்கப் பட்டுளள்ளன.

அந்தவகையில், திருநாவற்குளம் பகுதியைச் சேர்ந்த ஒரு இளைஞரிடம் இருந்து 80 போதை மாத்திரைகளும், அதே பகுதியைச் சேர்ந்த மற்றுமொரு இளைஞரிடம் இருந்து 30 போதை மாத்திரைகளும் மீட்கப்பட்டுள்ளன.

அத்துடன், அண்ணாநகர் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரிடம் இருந்து 20 போதை மாத்திரைகளும், லக்சபானா வீதி, கத்தார் சின்னக்குளம் பகுதியைச் சேர்நத இளைஞா ஒருவரிடம் இருந்து 20 போதை மாத்திரைகளும் மீட்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து மேற்படி நான்கு இளைஞர்களும் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

---

## சுமந்திரனுடன் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் சுமந்திரன் கருத்துத் தெரிவிக்கையில்,

“இலங்கைக்கான பிரான்ஸ் நாட்டுத் தூதுவர் லெமி லம்பேட் மற்றும் பிரதித் தூதுவர் மத்தியு ஜோன் ஆகியோர் இன்று மதியம் எனது கொழும்பு அலுவலகத்துக்கு வருகை தந்து தற்போதைய அரசியல் நிலைமை தொடர்பில் கலந்துரையாடினர்.

அத்துடன் தமிழ் மக்களின் அபிலாஷைகள், அரசியல் தீர்வு, பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் சம்பந்தமாக நீண்ட உரையாடலிலும் அவர்கள் ஈடுபட்டனர்.” – என்றார்.

---

## சட்டவிரோதமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிடமாக நின்று கொண்டிருந்த நபரைப் பிடித்து விசாரித்தனர்.

அப்போது அவர் சட்டவிரோதமான முறையில் கடல் வழியாக இலங்கையில் இருந்து தப்பி தனுஷ்கோடி வந்து இறங்கியமை தெரியவந்ததையடுத்து அவரைக் கைது செய்த மரைன் பொலிஸார், அவரிடம் நடத்திய விசாரணையில் அவர் இலங்கை, மன்னார் – வங்காலைப் பகுதியைச் சேர்ந்த சூசை தாசன் (வயது 56) என்பவர் என்று தெரியவந்தது.

இதையடுத்துச் சட்டவிரோதமான முறையில் கடல் வழியாகத் தமிழகத்துக்குள் சென்றதன் காரணம் குறித்து மேற்படி நபரை மரைன் பொலிஸார், மண்டபம் மரைன் காவல் நிலையத்தில் வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

---




## இளைஞர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டார் சைக்கிள் மோதிய விபத்தில் ஆன விழுந்தான் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஹொரவ்பொத்தானை பிரதான வீதியின் 10 ஆம் கட்டைப் பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மஹதிவுல்வெவ பகுதியில் இருந்து தம்பலகாமம் ஆடைத்தொழிற்சாலைக்குச் சென்ற பஸ்ஸுடன் மோட்டார் சைக்கிளில் வேகமாகச் சென்ற இளைஞர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் கபுகொல்லாவ – ஆனவிழுந்தான் பகுதியைச் சேர்ந்த எஹியா உல்முதீன் சஹீல் அஹமட் (வயது 19) என்ற இளைஞரே உயிரிழந் துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் திருகோண மலை பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பான விசாரணைகளை மொரவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# ஒழியுமா இந்தச் சட்டம்?

இலங்கையில் 'பிள்ளையார் கல்யாணம் போல' எப்போதும் நடக்காமல் நாளை, நாளை என்று தள்ளிப் போகும் சில விடயங்களில் ஒன்று பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை நீக்குவது அல்லது மாற்றீடு செய்வது என்று இப்பத்தியில் பல தடவைகள் சுட்டிக்காட்டி வந்திருக்கிறோம்.

இப்போது மீண்டும் இச்சட்டத்தை ரத்து செய்வது தொடர்பான பரிந்துரை அறிக்கை - மாற்றீடு செய்வதற்கான சட்ட மூலத்துக்குரிய விவரங்களைக் கொண்ட அறிக்கை - நீதி அமைச்சரிடம் கையளிக்கப்பட்டுள்ளது என்று செய்தி வெளியாகி உள்ளது. இந்த விடயம் தொடர்பாக ஆராயும் குழுவின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி லியன்சி அரசகுலரத்ன இந்த அறிக்கையை நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவிடம் கையளித்துள்ளார் என இப்போது செய்தி வெளியாகியிருக்கின்றது.

அண்மையில் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத்தொடர் நடைபெற இருந்த சமயத்தில் இதோ செப்டம்பரில் 'பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை' மாற்றீடு செய்வதற்கான 'பயங்கரவாத தடை சட்டம்' முன்வைக்கப்பட்டு விடும் என்று அறிவிக்கப்பட்டது. அப்போதே, இது, ஜெனிவா மனித உரிமைகள் கவுன்ஸிலின் அமர்வில் இலங்கை தொடர்பான விடயம் மும்முரமாக ஆராயப்பட இருக்கையில் அதனைச் சமாளிப்பதற்காக முன்வைக்கப்படும் வழமையான தந்திர அறிவிப்புத்தான் என்று இப்பத்தியில் கோடி காட்டி இருந்தோம். இப்போது செப்டம்பர், அக்டோபர் முடிந்து நவம்பர் மாதமும் அரைவாசி தாண்டும் நிலை வந்து விட்டது. இப்போதுதான் இது தொடர்பான அறிக்கை தமக்குக் கிடைத்திருப்பதாக நீதி அமைச்சர் கூறுகிறார்.

இது ஒன்றும் புதிய விடயம் அல்ல. 1978 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்தக் கொடூர- குரூர- மோசமான- மிலேச்சத்தனமான- காட்டுமிராண்டித்தனமான - மிகப் பயங்கரமான - பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் நீக்கப்படும் என்ற கயிறு பல தசாப்தங்களாக ஆளும் தரப்புகளினால் அவ்வப்போது அறிவிக்கப்பட்டு கொண்டுதான் இருக்கின்றது. நல்லாட்சி அரசில் அதை மாற்றீடு செய்வதற்கான பிறிதொரு சட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கும் அளவுக்கு நாடகங்கள் அரங்கேறியமை நாங்கள் அறிந்த விடயம்தான்.

இப்போதும் கூட பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை நீக்குகிறோம் என்ற பெயரில் இன்னொரு காட்டுமிராண்டி 'பயங்கரவாத தடைச் சட்டத்தை' கொழும்பு மாற்றீடாகக் கொண்டு வராது என்பதற்கு எந்த உறுதிப்பாடும் இல்லை.

தவிரவும், இந்த மாற்றீட்டுச்சட்ட மூலம் தொடர்பான அறிக்கையை மக்களின் பரிசீலனைக்கு முன் வைக்கிறோம், அமைச்சரவை பரிசீலனைக்கு முன்னெடுக்கிறோம், அதைச் சட்டமாக்குவதற்காக சட்ட வரைஞர் திணைக்களத்துக்கு அனுப்புகிறோம் என இன்னும் நீண்ட பல மாதங்கள் இது விடயத்தில் அரசுத் தரப்பு இழுபறி காட்டுவதற்கு சாத்தியங்கள் உண்டு. அவற்றையெல்லாம் தாண்டி இந்த மாற்றீடுச்சட்ட மூலம் வரவும், இருக்கும் சட்டம் நீக்கப்படவும் கூட ஐந்தாறு மாதங்களுக்குக் குறையாமல் தேவைப்படும். அவற்றைத் தாண்டியும் இதுவரை 47 ஆண்டுகளாக நடைமுறையில் இருக்கும் குரூரச் சட்டம் நீக்கப்படுமா என்பதை அது நடக்கும் போதுதான் கண்டு கொள்ள வேண்டும்

# அனர்த்தத்தில் இருந்து மக்களை பாதுகாக்க பல்வேறு வேலைத்திட்டங்களை முடுக்கிவைப்பு

## அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் றியாஸ்

(நூருல் ஹுதா உமர்)

எந்தவொரு அனர்த்த நிலையிலும் மக்களின் உயிர் மற்றும் சொத்துக்களை பாதுகாப்பது மிக முக்கியம். அதற்காக வெள்ள பாதுகாப்பு நிதி ஒன்றை உருவாக்குவதும், தேவைக்கேற்ப திறக்கவும் மூடவும் கூடிய மதகு வாயில் அமைப்புகளை நிறுவுவதும் அவசியமாகும். இது பிராந்திய மக்களுக்கு நிலையான பாதுகாப்பை வழங்கும். இந்த பணிகள் அனைவரதும் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்பட வேண்டும். சமூக அமைப்புகள், உள்ளூர் தலைவர்கள், அரசு அதிகாரிகள் ஆகியோர் ஒன்றிணைந்து செயல்பட்டால் மட்டுமே அபிவிருத்தி நிலையானதாக அமையும். இதற்கான முறையான வேலைத்திட்டம் உருவாக்கப்பட்டு, உரிய அதிகாரிகளின் ஒப்புதலுடன் நடைமுறைக்கு கொண்டு வரப்படும் என்று அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் எம்.ஏ.சீ.எம். றியாஸ் தெரிவித்தார்.

சாய்ந்தமருது பிரதேச செயலக எல்லைக்குள் அனர்த்த முகாமைத்துவ செயற்குழு (Working Committee) ஒன்றை அமைப்பது தொடர்பான நிகழ்வு பிரதேச செயலாளர் எம்.எம். ஆஷிக் தலைமையில் நேற்று பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே பிரதிப் பணிப்பாளர் எம்.ஏ.சீ.எம். றியாஸ் இந்த கருத்துக்களை முன்வைத்தார். தொடர்ந்து அங்கு கருத்து தெரிவித்த அவர்,

"சாய்ந்தமருது போன்ற கடலோரப் பிரதேசங்களில் இயற்கை அனர்த்தங்கள் அடிக்கடி நிகழ்கின்றன. மக்கள், அரசு, மற்றும் சமூக அமைப்புகள் ஒன்றிணைந்து செயல்பட்டால் தான் மக்களின் உயிர் மற்றும் சொத்துக்களை பாதுகாக்க முடியும். 2004 ஆம் ஆண்டு சுனாமி, 2010 வெள்ளம், மற்றும் அண்மையில் 2024-25ல் ஏற்பட்ட வெள்ளம் ஆகிய அனர்த்தங்களில் சாய்ந்தமருது கடுமையாக பாதிக்கப்பட்டது. "இந்த அனுபவங்களே எங்களுக்கான விழிப்புணர்வையும், வலுவான முகாமைத்துவத் திட்டங்களையும் உருவாக்க வழிவகுத்தன.



நிகழ்வில் சாய்ந்தமருது பிரதேச செயலக அதிகாரிகள், அனர்த்த நிவாரண சேவைகளை பொறுப்பாக மேற்கொண்டுவரும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பள்ளிவாசல் நிர்வாகிகள், வர்த்தக சங்க உறுப்பினர்கள், சமூக சேவை அமைப்புகளின் பிரதிநிதிகள், இளைஞர் அமைப்புகள் மற்றும் ஊடகவியலாளர்கள் எனப் பலரும் பங்கு கொண்டிருந்தனர்.

உண்மையாகவே அனர்த்த முகாமைத்துவப் பணிகளில் ஈடுபடுவது எமது இளைஞர்களுக்கு கிடைத்த ஒரு அரிய வாய்ப்பாகும். 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி முதல் 2010 ஆம் ஆண்டு வெள்ளம், மேலும் அண்மையில் 2024 -25 இல் ஏற்பட்ட வெள்ளம் வரை சாய்ந்தமருது பிராந்தியம் பல்வேறு அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் எங்களது கவனம் தொடர்ந்து இப்பிராந்தியத்திலேயே மையப்படுத்தப்பட்டுள்ளது.

அந்த அடிப்படையில், இளைஞர்களை மையப்படுத்தி அனர்த்த அபாயக் குறைப்பு வேலைத்திட்டங்களை 2019 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து முன்னெடுத்து வருகிறோம். அம்பாறை மாவட்டத்தில் இதுவரை 250 இளைஞர்கள் 200 மணி நேர பயிற்சியுடன் உருவாக்கப்பட்டுள்ளனர். அதேபோன்று, அரசுத் துறைகளில் பணிபுரியும் உத்தியோகத்தர்களுக்கும் தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த பயிற்சிகள் இளைஞர்களின் திறனையும், அவசரநிலைகளில் செயல்படும் திறத்தையும் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டவை.

கடந்த 2024 இல் ஏற்பட்ட காரைதீவு சம்பவத்துக்குப் பின்னர், பிராந்திய இளைஞர்களுக்கு "Swimming and Diving" பயிற்சிகள் ஆறு மாத காலம் வழங்கப்பட்டன. அதில் 30 இற்கும் மேற்பட்ட இளைஞர்கள் வெற்றிகரமாக பயிற்சி பெற்றனர். தற்போது அவர்கள் தேவையான சமயங்களில் கடற்படையுடன் இணைந்து பணிபுரியக் கூடிய திறனைப் பெற்றுள்ளனர். இத்தகைய திறமைகளை விரிவுபடுத்தும் நோக்கில் சாய்ந்தமருதிலேயே புதிய பயிற்சித் திட்டம் ஒன்றை ஆரம்பிக்க முடிவு செய்துள்ளோம். தொடக்கமாக சுமார் 130 பேர் சாய்ந்தமருது மற்றும் கல்முனை பிரதேசங்களில் இருந்து விண்ணப்பித்துள்ளனர். இந்தப் பயிற்சி கட்டம் கட்டமாக நடத்தப்பட்டு, பங்கேற்பாளர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படும்.

மேலும், அவசர நிலை நடவடிக்கைகளில் ஆரம்ப எச்சரிக்கை அமைப்பு மற்றும் தகவல் பரிமாற்ற முறைகள் சிறப்பாக செயல்படுதல் அவசியம். கடந்த சில சம்பவங்களில் ஏற்பட்ட தொடர்பு குறைபாடுகள் பெரிய இழப்புகளுக்குக் காரணமாகியுள்ளன. அவை மீண்டும் நிகழாத வகையில் இளைஞர்களுக்கு மீட்பு நடவடிக்கை, நீச்சல், தொடர்பு திறன் ஆகியவற்றில் சிறப்புப் பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும். இதனுடன், தென்கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து சமூக மட்டப் பயிற்சிகளும், ட்ரோன் தொழில்நுட்பம் உள்ளிட்ட நவீன உபகரணங்கள் பற்றிய பயிற்சிகளும் வழங்கப்பட உள்ளன. அண்மையில் நடத்தப்பட்ட டைவிங் பயிற்சியில் பங்கேற்ற இளைஞர்கள் மிகச் சிறப்பாக செயல்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எதிர்காலத்தில் ஒரு திறமையான, பயிற்சியுற்ற தொண்டர்களை உருவாக்கி, சாய்ந்தமருது பிரதேசத்தை அனர்த்த முகாமைத்துவத்தில் முன்னோடியாக மாற்றுவதற்கு அனைவரின் ஒத்துழைப்பும் தேவை என்றும் தெரிவித்தார்.

குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998







# சுகாதாரம், பொருளாதார மேம்பாட்டை முன்னிறுத்தி அன்னையர் ஆதரவு கூட்டம்

**(நூருல் ஹுதா உமர்)**

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனைக்கமைய, கல்முனை பிராந்திய தாய் சேய் நலப் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் பி.ஜி.பி. டானியலின் ஏற்பாட்டில் "அன்னையர் ஆதரவு குழு கூட்டம்" இடம்பெற்றது.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே.மதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சாய்ந்தமருது விவசாய விரிவாக்கல் அலுவலக விவசாய போதனாசிரியர்களால் வீட்டுத் தோட்ட செய்கையின் மூலம் குடும்பங்களின் வருமானத்தை உயர்த்துவது மட்டுமல்லாது, ஆரோக்கியமான உணவையும் தங்கள் குடும்பத்துக்கு உற்பத்தி செய்து வழங்க முடியும் என்பதையும் தேவையான பயிர் வகைகளையும் பெற்றுக் கொள்ளலாம் என்பதையும் தெளிவுபடுத்தி அன்னையர் ஆதரவு குழு உறுப்பினர்களின் பொருளாதார முன்னேற்றத்தை மேம்படுத்தும் வழிகளையும் சுட்டிக்காட்டினர்.

சுயதொழில்களை ஊக்குவிக்கும் வழிகாட்டல்கள், சிறு அளவிலான தொழில் முயற்சிகள், மற்றும் பெண்கள் தன்னம்பிக்கையுடன் சமூக முன்னேற்றத்தில் பங்கு எடுக்க வேண்டிய அவசியம் போன்றவை குறித்து முக்கியமான வழிகாட்டல்கள் இதன்போது வழங்கப்பட்டது.

வீட்டுத்தோட்டம் என்பது ஒரு குடும்பத்தின் பொருளாதாரத்துக்கும் ஆரோக்கியத்துக்கும் இரட்டை பலன்களை வழங்கும் சிறந்த வழி, வீட்டில் காய்கறி, பழம், கீரை போன்றவற்றை வளர்ப்பதன் மூலம் சத்தான உணவைப் பெற முடியும். இதுவே குழந்தைகள் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கும் சிறந்த வழிமுறையாகும் என்பது பற்றியும் விளக்கங்கள் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வின் போது, சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே. மதன், "அன்னையர் ஆதரவு குழுக்கள் சமூகத்தில் மாற்றத்தை உருவாக்கும் வலிமையான தளம். தாய்மார்கள் தங்கள் திறமைகளையும் முயற்சிகளையும் கொண்டு சுய நம்பிக்கையுடன் பொருளாதார வளர்ச்சியையும், குடும்ப ஆரோக்கியத்தையும் மேம்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார். இந்தக் கூட்டத்தில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட 9 அன்னையர் ஆதரவு குழுக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# போதைப்பொருள் குற்றவாளிக்கு மன்னாரில் ஆயுள் தண்டனை விதிப்பு

**(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**

20 கிராம் மெத்தம் (ஐஸ்) போதைப்பொருளை உடமையில் வைத்திருந்தமை மற்றும் வியாபாரம் செய்தமை தொடர்பான வழக்கில், எதிரிக்கு ஆயுள் தண்டனை விதித்து மன்னார் மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.




இந்தக் குற்றம், கடந்த 2022 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் இடம்பெற்றதாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

இது தொடர்பான வழக்கு, நேற்று புதன்கிழமை (12) மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதி எம். மிஹால் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த வழக்கில், வழக்குத் தொடருநர் தரப்புக்காக அரச சட்டவாதி ஆறுமுகம் தனுஷன் ஆஜராகி, வழக்கை நெறிப்படுத்தினார். எதிரி தரப்புக்காக ஜனாதிபதி சட்டத்தரணி யு. ஆர். டி சில்வா ஆஜராகியிருந்தார்.

வழக்கு விசாரணையின் முடிவில், வழக்குத் தொடுநர் தரப்பால் முன் வைக்கப்பட்ட சாட்சியங்களின் அடிப்படையில், எதிரி மீதான குற்றச்சாட்டு நியாயமான சந்தேகத்துக்கு அப்பால் நிரூபிக்கப்பட்டதாக மன்றம் ஏற்றுக்கொண்டது.

இதையடுத்து, எதிரியை குற்றவாளியாக அறிவித்த நீதிபதி எதிரிக்கு ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

சமீப காலமாக, மன்னார் பிரதேசத்தில் இடம் பெறும் பாரிய போதைப் பொருள் குற்றங்கள் தொடர்பில், குற்றவாளிகளுக்கு ஆயுள் தண்டனை மற்றும் நீண்ட கால கடூழிய சிறை தண்டனைகள் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

# “கிளீன் ஸ்ரீலங்கா” திட்டத்தின் கீழ் ஹட்டன் பொலிவுபெற வேண்டும்

## ஹட்டன் டிக்கோயா நகர சபை உறுப்பினர் வைத்தியர் நந்தகுமார் கோரிக்கை

(மஸ்கெலியா நிருபர்)

ஹட்டன் நகர போக்குவரத்து நெறிசலை போக்குவதற்கு ஜனாதிபதி வரவு – செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்துள்ளமைக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல், ஹட்டன் நகரில் நீண்ட காலமாக நிலவி வரும் குப்பை பிரச்சினைக்கு ஜனாதிபதியின் கிளீன் ஸ்ரீ லங்கா திட்டத்தில் தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று ஹட்டன் டிக்கோயா நகர சபையின் முன்னாள் தலைவரும், இந்நாள் உறுப்பினருமான வைத்தியர் அழகமுத்து நதகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

மலையகத்தின் பிரதான நகரங்களில் ஹட்டன் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். கொழும்பு, கண்டி, நுவரெலியா, பலாங்கொடை, கதிர்காமம், யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு முதலான பகுதிகளுக்கு இங்கிருந்து பஸ்கள் புறப்படுகின்றன. கொழும்பு, பதுளை ரயில் சேவையும் இடம்பெற்று வருகின்றது. ஆயிரக் கணக்கான மாணவர்கள் கல்வி பயிலும் பிரபல பாடசாலைகள், கல்வித் திணைக்களம், நூற்றுக் கணக்கான வர்த்தக நிலையங்கள், ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடியிருப்புகள், நீதி மன்றங்கள், பொலிஸ் நிலையம், மின்சார சபை, நீர் வழங்கல் சபை போன்றவற்றோடு பௌத்த, இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய



வணக்க ஸ்தலங்களும் காணப்படுகின்றன.

வருடத்தில் ஆறு மாதங்களுக்கு ஹட்டன் நகரின் ஊடாக சிவனொளி பாதமலை யாத்திரை பருவகாலம் இடம்பெற்று வருகின்றது. வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் உட்பட லட்சக் கணக்கான உள்ளூர் யாத்திரிகர்களும் வந்து போகின்றார்கள்.

எனவே, ஹட்டன் நகரம் அழகாகவும் சுத்தமாகவும் நேர்த்தியாகவும் இருக்க வேண்டியது அவசியமாகும். எனினும், நகரில் ஆங்காங்கு குப்பைகள் கொட்டப்பட்டு சிதறிக் கிடப்பதை கண்கூடாகப் பார்க்க முடிகின்றது. காலத்துக் காலம் கழிவு முகாமைத்துத்வதை மேற்கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், பொருத்தமான இடத்தைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை.

இப்போது தேசிய மக்கள் சக்தியின் நிர்வாகத்துக்கு உட்பட்டு ஹட்டன்-டிக்கோயா நகர சபை நிர்வாகம் நடைபெற்று வருகின்றது. அதற்கு முன்னர் நகரில் சேகரிக்கப்படும் தொன் கணக்கான குப்பைகள் அனைத்தும் நகரை அண்மித்து கொழும்பு வீதியில் அமைந்துள்ள வாடி வீட்டின் வளாகத்தில் கொட்டப்பட்டு வந்தது. புதிய நகர சபை நிர்வாகம் வந்த பின்னரும் கூட இன்னமும் அதே இடத்தில தான் குப்பைகள் கொட்டப்படுகின்றன.

இவ்வாறு தினசரி கொட்டப்படும் குப்பைகள் தேங்கிக் கிடப்பதால் துர்நாற்றம் வீசி வருகின்றது. இந்த வீதியால் வாகனங்களில் பயணிக்கும் மக்கள் துர்நாற்றத்தைப் பொறுக்க முடியாமல் மூக்கைப் பொத்திக் கொண்டு செல்ல வேண்டியுள்ளது. குப்பைகள் நிறைந்துள்ள இடத்தில் நாய்களும் பன்றிகளும் சுற்றித் திரிகின்றன. மழையும் வெயிலும் மாறி மாறி வருவதால் பூச்சிப் புழுக்கள் பெருகி, தொற்று நோய்கள் பரவக் கூடிய அச்சமும் ஏற்பட்டுள்ளது.

புதிய நகரசபை நிர்வாகம் முன்னாள் தலைவர்களையும் உறுப்பினர்களையும் திருடர்கள் என்று கூறி விமர்சனம் செய்வதை மட்டும் நோக்கமாகக் கொண்டு செயற்படாமல் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்து கழிவு முகாமைத்துவத்துக்கு பொருத்தமான இடத்தைத் தெரிவு செய்வதில் அக்கறை காட்ட வேண்டும். கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்தில் ஹட்டன் பிரகாசம் பெற வேண்டும்.– என்றார்.

# நீர்கொழும்பு, சிலாபம் களப்புகளில் கடத்தப்பட்ட 742 கிலோ பீடி இலை

## கடற்படையினரால் மீட்கப்பட்டது

(கற்பிட்டி எம்.எச். எம். சியாஜ்)

இலங்கை கடற்படையினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை மற்றும் திங்கட்கிழமை நீர்கொழும்பு களப்பு பகுதியிலும் சிலாபத்தில் உள்ள கருகபனை களப்பு பகுதியிலும் நடத்திய சிறப்பு தேடுதல் நடவடிக்கையின் போது, நாட்டுக்கு சட்டவிரோதமாக கொண்டு வரப்பட்ட சுமார் எழுநூற்று நாற்பத்திரண்டு கிலோகிராம் பீடி இலைகள் மற்றும் மூன்று டிங்கி படகுகளை கடற்படையினர் கைப்பற்றினர்.

நீர்கொழும்பு களப்பில் உள்ள கொத்தலாவல பாலத்துக்கு அருகில் மேற்கு கடற்படை கட்டளையின் இலங்கை கடற்படை கப்பல் கெலனி நடத்திய சிறப்பு சோதனை நடவடிக்கையின் போது, அந்த கடல் பகுதியில் சந்தேகத்துக்கு இடமான டிங்கி படகு ஒன்று பயணித்துக்கொண்டிருந்ததை அவதானித்து சோதனை செய்யப்பட்டது.





மேலும், சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டு வரப்பட்ட 16 பார்சல்களில் அடைக்கப்பட்ட சுமார் ஐநூற்று 513 கிலோகிராம் பீடி இலைகள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன.

அதேவேளை, சிலாபத்தின் கருகபனே களப்பு பகுதியில் வடமேற்கு கடற்படை கட்டளையின் விரைவு நடவடிக்கை படகுகள் தலைமையகம் நடத்திய சிறப்பு தேடுதல் நடவடிக்கையின் போது, சந்தேகத்துக்கு இடமான இரண்டு டிங்கி படகுகள் சோதனை செய்யப்பட்டன. இரண்டு டிங்கி படகுகளும், அந்தக் கப்பல்களுக்குள் ஆறு பார்சல்களில் அடைக்கப்பட்ட சுமார் 229 கிலோகிராம் பீடி இலைகளும் மீட்கப்பட்டன.

அதன்படி, நீர்கொழும்பு களப்பில் கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட பீடி இலைகள் மற்றும் டிங்கி படகு கட்டுநாயக்க சுங்கத் தடுப்பு அலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்டன. மேலும், சிலாபம், கருகபனே களப்பில் கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட பீடி இலைகள் மற்றும் டிங்கி படகு மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக சிலாபம்கலால்சிறப்புப்பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# யானைப் பிரச்சினைக்குத் தீர்வு கோரி ஈரளக்குளம் மக்கள் ஆர்ப்பாட்டம்!

(கல்லடி செய்தியாளர்)

மட்டக்களப்பு – ஏறாவூர்பற்று செங்கலடி பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட ஈரளக்குளத்தை அண்டிய கிராமங்களில் வாழும் மக்கள் தொடர்ச்சியாக காட்டு யானைகளினால் பாதிக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து திங்கட்கிழமை (10) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் பிரதேச மக்கள் எதிர்ப்பை தெரிவிக்கும் பொருட்டு செங்கலடி வைத்திய சாலையில் இருந்து பாதாதைகளை ஏந்திய வண்ணம் பிரதேச செயலகம்வரை சென்றிருந்தனர்.

இதன் போது மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் இ.சிறிநாத் சம்பவ இடத்துக்கு வருகை தந்து ஆர்ப்பாட்டக்காரர்களிடம் கலந்துரையாடியதுடன், மாவட்டத்தில் முக்கிய பிரச்சனையாகவுள்ள காட்டு யானை – மனித மோதல் விடயம் தொடர்பில் சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடமும், அமைச்சு மட்டத்திலும் அறிவித்துள்ளதோடு, நாடாளுமன்றத்திலும் இந்த விடயம் தொடர்பில் வலியுறுத்தவுள்ளார் என்று தெரிவித்தார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோரால் நாடாளுமன்ற உறுப்பினரிடம் மகஜர் கையளிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.



# கிளிநொச்சி கல்லாறு பகுதியில் பெருந்தொகையான கஞ்சா மீட்பு

(பூ.லின்ரன்)

கிளிநொச்சி கல்லாறு பகுதியில் பெருந்தொகையான கேரளா கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

நேற்று இரவு 11:50 மணியளவில் பிரமந்தனாறு கல்லாறு பகுதியில் வீட்டின் பின் பகுதியில் இருந்து 26 கிலோ கேரளா கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

இந்த மீட்பு நவடிக்கையானது நேற்று புலனாய்வு துறையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் இடம்பெற்றது.

கல்லாறு பகுதி முழுவதும் விசேட சுற்றி வளைப்பு மற்றும் தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இதன்போத குறித்த போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது.

இந்த விசேட சுற்றி வளைப்பின் போது சந்தேக நபர்கள் தப்பிச்சென்று உள்ளனர் என்றும் இந்தச் சம்பவம் தொடர்பாக



மேலதிக விசாரணைகளை தர்மபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மன்னாரில் 8 வயது சிறுமி துஷ்பிரயோக குற்றவாளிக்கு கடூழிய சிறைத்தண்டனை

(எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார், அடம்பன் பிரதேசத்தில் 8 வயது சிறுமி ஒருவரை பாரிய பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில், எதிரி குற்றவாளியாக இனங்காணப்பட்ட நிலையில், அவருக்கு 8 வருட கால கடூழிய சிறைத் தண்டனை விதித்து மன்னார் மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இந்தக் குற்றம், கடந்த 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பான வழக்கு விசாரணை, மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதி எம். மிஹால் முன்னிலையில் நேற்று புதன்கிழமை (12) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த வழக்கின் நீண்ட விசாரணைகளின் பின்னர், எதிரி குற்றவாளியாகக் காணப்பட்டார். எதிரி தரப்பு சார்பாக சட்டத்தரணி தினேஷன் ஆஜராகியிருந்தார்.

வழக்குத் தொடருநர் தரப்புக்காக, அரச சட்டவாதி ஆறுமுகம் தனுஷன் ஆஜராகி, வழக்கை நெறிப்படுத்தினார்.

தண்டனை குறித்த தனது சமர்பணத்தில், அரச சட்டவாதி தனுஷன் இக் குற்றத்தின் பாரதூரமான தன்மையையும், சமூகத்தில் பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் கடுமையாக வலியுறுத்தினார்.

எதிர்காலத்தில் இவ்வாறான கொடூரமான குற்றங்கள் மீண்டும் இடம் பெறாமல் தடுக்கும் பொருட்டு, குற்றவாளிக்கு அதியுச்ச கட்டாய சிறை தண்டனை வழங்க வேண்டும் எனவும், கொடூரமான இந்த செயலால் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு உரிய நஷ்ட ஈட்டை பெற்றுத் தருமாறும் மன்றை அவர் கோரினார்.

அரச சட்டவாதி அவர்களின் சமர்ப்பணத்தை ஏற்றுக்கொண்ட நீதிபதி, குற்றவாளிக்கு 8 வருட கடூழிய சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

அத்துடன், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு நஷ்ட ஈடாக 2 லட்சம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறும் குற்றவாளிக்கு கட்டளையிட்டு நீதிபதி தனது தீர்ப்பை வழங்கினார்.



# இடைக்குறிச்சி சுப்பிரமணிய வித்தியாலய புலமைப்பரிசில் மாணவர்கள் கௌரவிப்பு

(த.சுபேசன்)

இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தின் தரம் - 05 புலமைப்பரிசில் மாணவர்கள் கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் பாடசாலை முதல்வர் தி.அபராஜிதன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிப் பிரதேச செயலர் சத்தியசோதியும், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி கோட்டக்கல்விப் பணிப்பாளர் ந.ஜெயரூபனும் கௌரவ விருந்தினராக கொடிகாமம் ஹற்றன் நஷனல் வங்கி முகாமையாளர் க. முகுந்தனும் கலந்து கொண்டனர்.

இதன்போது 2025ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்த 06 மாணவர்களுக்கும் கனடாவை வசிப்பிடமாகக் கொண்ட பழைய மாணவர் கா.குகனின் பங்களிப்பில் சைக்கிள்களும், 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கு பிரான்ஸ் நாட்டில் வசிக்கும் பழைய மாணவர் மாதவனின் பங்களிப்பில் பணப்பரிசிலும் வழங்கி வைக்கப்பட்டன.

அதேநேரம், கொடிகாமம் மக்கள் வங்கி கிளை மற்றும் கொடிகாமம் ஹற்றன் நஷனல் கிளை ஆகியவற்றால் மாணவர்களுக்குப் பரிசில்களும்- பதக்கங்களும் வழங்கப்பட்டன.









# காணாமல் போன கடிதங்கள்...!

தற்போதுள்ள தொழில்நுட்ப யுகத்தில் பல பழங்கால பழக்கவழக்கங்களும் பழைமையான விடயங்களும் அழிந்துபோய் விட்டன. அதில் கடிதம் எழுதுவது என்பது காணாமலேயே போய்விட்டது எனலாம். 90 களுக்கு முற்பட்ட காலங்களில் கட்டாயம் கடிதங்கள் எழுதப்பட்டன. அப்போதொல்லாம் தொழில்நுட்பம் உச்ச நிலையை அடையவில்லை.

தூர இடங்களில் வாழும் உற்றார் உறவினர்களின் வீடுகளுக்கு விருந்தினராகச் செல்வதாயின் கட்டாயம் கடிதம் மூலம் முன்கூட்டியே அறிவிக்க வேண்டும்.

வெளிநாடுகளுக்கு வேலைக்குச் சென்றவர்களும் கடிதங்கள் மூலமாகவே தங்களுடைய இன்ப, துன்பங்களை பகிர்ந்து கொண்டனர். அத்தோடு ஒருவர் இறந்தால் அது பற்றி கடிதம் மூலமே வெளியூரில் இருப்பவர்களுக்குத் தெரியப்படுத்த முடியும். அக் கடிதம் அவர்களிடம் சென்றடைய பல நாள்கள் ஆகும்.

ஆனால் , தற்போது அவ்வாறு இல்லை. நினைத்த நேரத்தில் எந்தவொரு உறவினரிடமும் பேச முடியும். அத்தோடு அவர்களுடைய முகங்களை பார்த்தும் கதைக்க முடியும்.

அந்தளவுக்கு தொழில்நுட்பம் வளர்ந்துவிட்டது. இது வளர்ச்சியாக பார்க்கப்பட்டாலும் உறவினரிடமிருந்து வரும் கடிதத்தை பிரித்து குடும்பமே ஓரிடத்தில் அமர்ந்து இருக்க ஒருவர் வாசிக்கும் போது அதிலிருந்துவரும் சந்தோஷத்துக்கு அளவே இல்லை. ஆனால் இப்போது வீட்டில் ஒவ்வொரு இடத்தில் ஒவ்வொருவர் தங்களுடைய தொலைபேசிகளுடனேயே பொழுதைச் சொல விடுகிறீர்கள்.



பானுஷா நிமல்,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

'அன்புள்ள' என ஆரம்பித்து 'இப்படிக்கு' என முடிக்கும் கடிதத்தின் இடைப்பட்ட எழுத்துக்கள் ஆயிரம், ஆயிரம் உணர்வுகளைச் சுமந்து நிற்கும். அந்தக் கடிதங்கள் பொக்கிஷங்களாக பார்க்கப்பட்டன. காதல் கடிதங்களுக்கு குறைவே இருக்காது.

கற்பனை ஊற்றெடுத்து ஓடும். "நலம் நலமறிய ஆவல்" என்ற வரி குறைவில்லாமல் ஆரம்பமாக இருக்கும். அப்போதெல்லாம் கடிதத்தை அனுப்பி காதலி அதைப் பெற்று அதற்கு பதில் கடிதம் காதலனிடம் கிடைக்கும் வரை நிமிடம் கூட வருடமாக இருக்கும்.

இவர்களுக்கு இடையில் நண்பர்கள் தான் கடிதம் பணிமாற்றும் தபால்காரர்கள். வயதான நபர்களிடம் காதல் கதையைக் கேட்டால் அங்கு கடிதத்தின் பங்கு இல்லாமல் கதை நகராது. ஆனால் தற்போது, குறுஞ்செய்திக்குள் குறுகிவிட்டது. பதற்றம், காத்திருப்பு, ஏக்கம் எதும் இல்லை.

புறாக்களில் தூது அனுப்பும் மன்னர் காலம் முதல் கடிதம் வழியாக காதலை வெளிப்படுத்திய கடைசி தலைமுறையான 90களைச் சேர்ந்தவர்களாகவே இருப்பர்.

அவர்களில் வாழ்க்கையில் கடிதம் பாரியதொரு பங்களிப்பு செய்துள்ளது. தற்போதுள்ள தலைமுறையினர் அதன் வாசத்தை நுகரவில்லை. அவர்களுக்கு கடிதம் என்றால் என்ன என்று கற்பிக்க வேண்டி உள்ளது.

கடிதங்களால் ஈர்க்கப்பட்ட பிரிட்டிஷ் எழுத்தாளர் ரிச்சர்ட் சிம்ப்கின் கடந்த 2014 ஆம் ஆண்டு உலக கடிதம் எழுதும் தினத்தை அறிமுகப்படுத்தினார். அத்தோடு பாடசாலைகளுக்குச் சென்று உரையாடும் அவர் கடிதம் எழுதுங்கள் என்று மாணவர்களையும் ஊக்கப்படுத்தினார்.

அப்போதெல்லாம் வெளியூரில் உள்ள கணவனின் கடிதத்துக்கான காத்திருக்கும் மனைவியின் எதிர்பார்ப்பு, உறவினர்களின் கடிதங்களுக்காகக் காத்திருக்கும் உறவுகளின் ஏக்கம், தொலைதூரத்தில் இருக்கும் நண்பனுக்கு மற்றொரு நண்பன் எழுதும் கோலிகிண்டல் கலந்த கடிதம் என பலவகையான உணர்வுகளைச் சுமந்து இருந்தது.

பலர் அவ் நினைவுகளை இன்று வரை பொக்கிஷமாக பாதுகாத்து வருகிறார்கள்.

பலரின் கண்ணீர், சிலரின் மகிழ்ச்சி என அனைத்தும் கடிதங்கள் வழியேதான் தெரிவிக்கப்படும். கடிதம் அனுப்பி அது சென்றடைந்து பதில் வரும் வரையான தவிப்பைச் சொல்வதற்கு வார்த்தைகள் இல்லை. ஆனால் இன்று அனுப்பும் குறுஞ்செய்தி அதற்கான உரிமையாளரை சென்றடையும் குறுகிய நேரத்திலோ அல்லது உடனேயோ அதற்குப் பதில் குறுஞ்செய்தி வரும் இதில் எந்தவித ஏக்கமோ, சுவாரசியமோ இருக்காது.

அவ்வாறான நினைவுகளின் மத்தியில் இன்றைய நவீன தொழில்நுட்ப மாற்றம் மனிதர்களையும் மாற்றிவிட்டது. எதிர்காலத்தில் நினைவுகள் என சேமித்து கையில் வைத்திருக்க எதுவும் இருக்காது மாற்றாக அனைத்தும் கணினிகளின் அல்லது தொலைபேசிகளின் சேமிப்பு நினைவகங்களில் மட்டுமே காணப்படும்.




# தென் எருவில்பற்று பிரதேச செயலக ஏற்பாட்டில் பிறப்பு, திருமண பதிவு செய்யும் நடமாடும் சேவை

(வி.ரி.சகாதேவராஜா)

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகம் ஏற்பாடு செய்த பிறப்பு மற்றும் திருமண பதிவு பெற்று கொள்வதற்கான நடமாடும் சேவை யானது நேற்று (12) புதன்கிழமை பிரதேச செயலாளர் உ. உதயஸ்ரீதர் தலைமை மற்றும் வழிகாட்டுதலில், உதவி பிரதேச செயலாளர் சத்யகௌரி தரணிதரனின் நெறிப்படுத்தலில் பிரதேச செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன் போது மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலக பிரிவில் இதுவரை காலமும் பிறப்பு மற்றும் திருமண பதிவு பெற்றுக்கொள்ளாத சுமார் 50 இற்கும் மேற்பட்டோருக்கான பதிவு சான்றிதழ்களை உடனடியாக வழங்குவதற்கான நடவடிக்கைகள் இதன்போது மேற்கொள்ளப்பட்டன.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக கிழக்கு வலயத்துக்கான பிரதிப் பதிவாளர் நாயகம் கே. நடராசா கலந்து கொண்டார். கௌரவ அதிதியாக மனித உரிமை மற்றும் அபிவிருத்திக்கான நிலையத்தின் கிழக்கு பிராந்திய இணைப்பாளர் பா. பரசுராமனும் கலந்து கொண்டனர். இந்த நடமாடும் சேவைக் கான அனுசரணையை மனித உரிமை மற்றும் அபிவிருத்திக்கான நிலையம் வழங்கியிருந்தது.

இந்த நிகழ்வில் பிரதேச செயலக மேலதிக மாவட்ட பதிவாளர் கே. பேரின்ப நாயகம், பிரதேச செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், கிராம சேவை உத்தியோகத்தர்கள், அலுவலக உத்தி யோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்த னர்.

இந்த நடமாடும் சேவையைப் பிரதேச செயலக பதிவாளர் மற்றும் சிறுவர் பெண்கள் பிரிவு உத்தியோகத்தர்கள் இணைந்து ஒழுங்கு செய்திருந்த னர்.










# கிளிநொச்சியில் இயலாமை உடையோருக்கான சேவைகளை மேம்படுத்துவது பற்றிக் கலந்தாய்வு

(த.சுபேசன்)

இயலாமை உடைய நபர்களுக்கான சேவைகளை மேம்படுத்துவது குறித்து மாவட்ட மட்டத்தில் ஆலோசனைகளைப் பெறுவதற்கான ஒரு விசேட கலந்தாய்வு நாடாளுமன்ற ஒன்றியத்தின் முன்முயற்சியின் கீழ், அண்மையில் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் திறன்விருத்தி நிலையத்தில் இடம்பெற்றது.

“இயலாமை பற்றிய உணர்திறன் கொண்ட நாடாளுமன்றம்” என்ற இலக்குக்கு அமைய, நாடு முழுவதும் இயலாமை உள்ள நபர்களிடம் இருந்து நேரடியாகக் கருத்துக்களைப் பெறும் தொடர் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் நிலையில் அதன் முதற்கட்டமாக கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களை மையமாகக் கொண்டு இந்தக் கலந்தாய்வு நடத்தப்பட்டது.

இயலாமை உள்ள நபர்கள் பற்றிய நாடாளுமன்ற ஒன்றியத்தின் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் சுகத் வசந்த த சில்வா தலைமையில் நடைபெற்ற இந்த விசேட நிகழ்வில், ஒன்றியத்தின் பிரதி இணைத் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் கலந்து கொண்டார்.

கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் எஸ். முரளிதரன், முல்லைத்தீவு மேலதிக மாவட்டச் செயலாளர் சதீசன் மஞ்சுளாதேவி ஆகியோரும், உள்ளூராட்சி நிறுவனங்களின் மக்கள் பிரதிநிதிகள், பிரதேச செயலாளர்கள், இயலாமை உள்ள நபர்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அமைப்புகளின் பிரதிநிதிகள், பொலிஸ் அதிகாரிகள், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் இயலாமை உள்ள நபர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் இயலாமை உள்ள நபர்கள் என நூற்றுக்கணக்கானோர் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட செயலகங்கள் தேர்தல் முறைமைகளுக்கான சர்வதேச ஒன்றியத்தின் (IFES) அனுசரணையின் கீழ் இந்த கலந்துரையாடலைநிகழ்த்தியிருந்தனர்.





# 'கபட நாடகம் ஆடும் அவல ஆட்சி'
# தி.மு.க. மீது விஜய் கடும் விமர்சனம்

"எல்லா வகையிலும் கபட நாடகம் ஆடும் அவல ஆட்சியின் லட்சணங்களை மக்கள் மத்தியில் அம்பலப்படுத்து வோம். மக்கள் சக்தியின் மதிப்பை, வருகிற 2026 சட்டமன்றத் தேர்தலில் மக்களுடன் மக்களாக இணைந்து நின்று, இந்த அவதூறு மன்னர்கள் உணரச் செய்வோம்."

– இவ்வாறு என தி.மு.கவை த.வெ.க. தலைவர் விஜய் விமர்சித்துள்ளார்.

த.வெ.க. தலைவர் விஜய் நேற்று வெளியிட்ட அறிக்கையில் திமுக என்ற கட்சிப் பெயரைக் குறிப்பிடாமலேயே அதன் கொள்கை, கோட்பாடுகள், நிலைப்பாடு, ஆட்சி அதிகாரம் என எல்லா வற்றையும் மிகக் கடுமையாகச் சாடி யுள்ளார்.

தனது விக்கிரவாண்டி வி.சாலை முதல் மாநாடு தொட்டே த.வெ.க. தலை வர் விஜய், தி.மு.கவை கடுமையாக விமர்சித்து வருகிறார். கரூர் சம்பவத் துக்குப் பின்னர் சரியாக ஒரு மாதம் நிறைவுற்றதும் மீண்டும் தி.மு.க. மீதான கடுமையான விமர்சனங்களை முன் வைக்க ஆரம்பித்துள்ளார். அந்த வரி சையில் நேற்றைய அறிக்கை இணைந் துள்ளது.

விஜய் வெளியிட்ட அறிக்கையில், "சமீப காலமாக, ஆட்சி அதிகாரத்தில் இருந்து அதிவிரைவில் மக்களால் தூக்கி எறியப்படப் போகும் அதிகார மமதை கொண்ட கட்சி ஒன்று, அவசர கதியில் தனக்குப் பழக்கமான அவதூறு அரசியல் ஆட்டத்தைத் தொடங்கி உள்ளது. எந்தக் கட்சியைச் சொல்கிறோம் என்று தெரி கிறதா? அவதூறு ஒன்றையே அடிப்படை அரசியல் கோட்பாடாகக் கொண்ட கட்சி வேறு எந்தக் கட்சியாக இருக்கும் என்று சொல்லித்தான் தெரிய வேண்டுமா?

இப்போதெல்லாம் அந்தக் கட்சியின் ஒரே இலக்கு, நம்மைத் தூற்றுவதே. தமி ழக வெற்றிக் கழகத்தை மட்டும் மூளை யில் தேக்கி யோசிப்பதே அதன் முழுநேர வேலை என்றாகிவிட்டது.

அறிவுத் திருவிழா என்று பெயர் வைத்து விட்டு, முழுக்க முழுக்க, தமிழக வெற் றிக் கழகத்தை மட்டுமே மறைமுக மாகத் திட்டும் திருவிழாவாக அதை மாற்றியதிலேயே அது அறிவுத் திரு விழாவாக இல்லாமல் அவதூறுத் திரு விழாவாகத்தானே மாறியது?

பெரியார், அண்ணா கொள்கைகளை மறந்துவிட்ட அவர்கள், மதச்சார்பற்ற சமூக நீதிக் கொள்கைகளோடு களம் இறங்கி, யாருக்கும் எதற்கும் வளையாமல் வலம் வரும் தமிழக வெற்றிக் கழகத்தைப் பார்த்து, கொள்கையற்றவர்கள் என்று கூறுவதற்கான காரணம் அவர்களுக்கு ஏற்பட்ட உளைச்சலும் குமைச்சலுமன்றி வேறென்ன?

53 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும், ஆட்சி அதிகாரத்தைப் பகல் கனவாக்கப் போகும் ஒரு 'பக்கா மாஸ்' கட்சி வந்திருப் பதைக் கண்டு நாள்தோறும் நாக்குழறி, உளறும் அவர்களுக்கு நாம் சொல்வ தெல்லாம் என்ன தெரியுமா?

நேற்று நடந்த சிறப்புத் தீவிரத் திருத் தத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் கூட யாரை விமர்சிக்க வேண்டுமோ அவர்களை விமர்சிப்பதைவிட, நம்மைத் திட்டவைத்து அகமகிழ்ந்ததே நடந்தது.

எல்லா வகையிலும் கபட நாடகம் ஆடும் அவர்களது அவல ஆட்சியின் லட்சணங்களை மக்கள் மத்தியில் அம்பலப்படுத்துவோம். மேலும், மக்கள் சக்தியின் மதிப்பை, வருகிற 2026 சட்ட மன்றத் தேர்தலில் மக்களுடன் மக்களாக இணைந்து நின்று, இந்த அவதூறு மன்னர்கள் உணரச் செய்வோம்" என்று குறிப்பிட்டுள்ளார்.



# த.வெ.க. கூட்ட நெரிசலில் காயமடைந்த 6 பேர் சி.பி.ஐ. விசாரணைக்கு முன்னிலை

த.வெ.க. கூட்ட நெரிசலில் சிக்கி காயமடைந்த 6 பேர் சி.பி.ஐ. அதிகாரிகள் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு ஆஜராகினர்.

கரூர் வேலுசாமிபுரத்தில் நடைபெற்ற த.வெ.க. பிரச்சாரக் கூட்டத்தில் கட்சித் தலைவர் விஜய் பங்கேற்றார். அப்பே–ாது ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். மேலும், 100 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இந்த வழக்கை விசாரித்து வரும் சி.பி.ஐ. அதிகாரிகள், இது தொடர்பாக 300 இற்கும் மேற்பட்டவர்களுக்கு அழைப்பாணை அனுப்பி, விசாரணை நடத்தி வருகின்றனர்.

அதன்படி, வேலுசாமிபுரத்தில் கடை வைத்துள்ள வியாபாரிகள், பல்வேறு துறை அதிகாரிகள், பாதுகாப்பு பணியில் ஈடுபட்ட பொலிஸார், உள்ளிட்டவர்களிடம் சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரணை மேற் கொண்டனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் முதல் நெரிசலில் சிக்கி காயமடைந்த வர்கள் விசாரணைக்கு ஆஜராகி வரு கின்றனர். நேற்று முன்தினம் 3 பேர் ஆஜரான நிலையில், நேற்று தாந் தோணிமலை சரவணகுமார் உள்ளிட்ட 6 பேர் விசாரணைக்கு ஆஜராகினர்.

அவர்களிடம் சி.பி.ஐ. அதிகாரிகள், கூட்ட நெரிசல் சம்பவம் தொடர்பாக பல்வேறு விவரங்களைக் கேட்டறிந் துள்ளனர்.

# சூதாட்ட செயலி விளம்பர விவகாரம்: மன்னிப்புக் கோரினார் பிரகாஷ்ராஜ்

ஒன்லைன் சூதாட்ட செயலி விளம் பர விவகாரத்தில் நடிகர் பிரகாஷ் ராஜ் மன்னிப்பு கோரியுள்ளார்.

ஒன்லைன் சூதாட்ட செயலி விளம் பரத்தில் நடித்த நடிகர் பிரகாஷ் ராஜ், ரானா, விஜய் தேவரகொண்டா, மஞ்சு லட்சுமி உட்பட 29 பேருக்கு ஹைதரா பாத் சி.ஐ.டி. சிறப்பு விசாரணை குழு, நோட்டீஸ் அனுப்பி ஒவ்வொருவராக விசாரணைக்கு அழைத்து விளக்கம் கேட்டு வருகிறது.

இந்நிலையில், நேற்று நடிகர் பிர காஷ் ராஜ் இந்த விவகாரம் தொடர் பாக சி.ஐ.டி. அலுவலகத்தில் ஆஜராகி, அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு விளக் கம் அளித்தார்.மேலும், சில வங்கி கணக்கு விவரங்களையும் அவர் சிறப்பு விசாரணை குழுவிடம் சமர்பித் தார்.

விசாரணை நடந்து முடிந்த பின் னர் பிரகாஷ்ராஜ் செய்தியாளர்களிடம்



கருத்து தெரிவிக்கையில்,

“2016 இல் நான் ஒரு செய லிக்கு பிரமோஷன் செய்தேன். அந்த செயலி 2017 இல் ஒன்லைன் சூதாட்ட செயலியாக மாற்றப்பட்டது. இதனை அறிந்து அந்த ஒப்பந்தத்தை நான் ரத்து செய்து கொண்டேன். தெரிந்து செய்தாலும், தெரியாமல் செய்தா லும் தவறு, தவறுதான் என்பதால் இது தொடர்பாக பொதுமக்களிடம் நான் மன்னிப்பு கோருகிறேன்.” என் றார்.





# அமெரிக்காவில் 43 நாள்கள் நீடித்த நிதி முடக்கம் முடிவுக்கு வந்தது

## சட்டமூலத்தில் கையெழுத்திட்டார் ட்ரம்ப்

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நேற்று இரவு அரசாங்க நிதி சட்டமூலத்தில் கையெழுத்திட்டுள்ளார்.

இது 43 நாள்களாக நீடித்த அரசின் நிதி முடக்கத்தை முடிவுக்குக் கொண்டு வந்தது.

அமெரிக்க நிதியாண்டு செப்டம்பர் 30 இல் முடிவடையும். ஒக்டோபர் 1 இல் புதிய நிதியாண்டு தொடங்கும். இதனையடுத்து ஆண்டுதோறும் புதிய நிதியாண்டுக்கான பட்ஜெட் சட்டமூலம் செப்ரெம்பர் 30 இல் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும். அமெரிக்க அரசு இயங்கத் தேவையான ஆண்டு செலவின சட்டமூலத்துக்கு இந்த இரு அவைகளின் உறுப்பினர்களும் ஒப்புதல் அளிக்க வேண்டும்.

ஒட்டுமொத்தமாக, 60 சதவீத செனட் உறுப்பினர்கள் ஒப்புதல் அளித்தால் மட்டுமே, அரசின் செலவினங்களுக்கான நிதி விடுவிக்கப்படும். இந்நிலையில், ஒக்டோபர் 1 இல் அமெரிக்க நாடாளுமன்றத்தில் 60 வீத உறுப்பினர்களின் ஒப்புதல் கிடைக்காததால் நிதி சட்டமூலம் தோல்வியடைந்தது. இதனால் அமெரிக்க அரசு எதிர்கொண்ட நிதி முடக்கம் 43 நாள்களாக நீடித்தது.

இந்த நிதி முடக்கத்தால் அமெரிக்காவில் இராணுவம், எல்லை பாதுகாப்புப் படை, விமானக் கட்டுப்பாட்டுத் துறை உள்ளிட்ட சில அத்தியாவசிய துறைகள் மட்டுமே இயங்கின. மற்ற துறைகளின் அரசு ஊழியர்கள் பணிபுரியவில்லை, அதுபோல அரசு ஊழியர்களுக்கு ஊதியமும் வழங்கப்படவில்லை.

இந்தச் சூழலில் சில ஜனநாயக கட்சியின் உறுப்பினர்களின் ஆதரவுடன், செனட் சபையில் நிதி சட்டமூலம் நேற்று நிறைவேறியது. இந்த சட்டமூலத்துக்கு ஆதரவாக 222 வாக்குகளும், எதிராக 209 வாக்குகளும் பதிவாகின. சட்டமூலம் நிறைவேறிய இரண்டு மணி நேரத்துக்குப் பிறகு கையெழுத்திடும் விழா நடந்தது.

சட்டமூலத்தில் கையெழுத்திடும் முன்பு பேசிய ட்ரம்ப்,

“இன்று நாங்கள் மிரட்டிப் பணம் பறிப்பதற்கு ஒருபோதும் இடமளிக்க மாட்டோம் என்ற தெளிவான செய்தியை சொல்லியுள்ளோம். நான் அமெரிக்க மக்களுக்கு ஒன்றை சொல்ல விரும்புகிறேன், நீங்கள் இதை மறந்துவிடக் கூடாது. இடைக்காலத் தேர்தல்கள் வரும்போது ஜனநாயக கட்சியினர் நம் நாட்டுக்கு என்ன செய்தார்கள் என்பதை மறந்துவிடாதீர்கள்.” என்றார்.

இந்த சட்டமூலம் ஜனவரி 30 ஆம் வரை அரசுக்கான நிதியுதவியை நீட்டிக்கும். இதனால் அரசின் அத்தனை துறைகளும் இனி செயல்பட ஆரம்பிக்கும். அனைத்து அரசு ஊழியர்களும் பணிக்கு திரும்புவார்கள், அவர்களுக்கு ஊதியமும் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நெதன்யாகுவிற்கு மன்னிப்பு வழங்க வேண்டும் இஸ்ரேலின் ஜனாதிபதிக்கு ட்ரம்ப் கடிதம்

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மீது நிலுவையில் உள்ள ஊழல் வழக்குகளிலிருந்து அவருக்கு மன்னிப்பு வழங்குமாறு, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், இஸ்ரேல் ஜனாதிபதி ஐசக் ஹெர்சாக்கிற்கு கடிதம் எழுதியுள்ளார்.

நெதன்யாகு மற்றும் அவரது மனைவி சாரா ஆகியோர் மீது, அரசியல் உதவிகளுக்குப் பதிலாக 2,60,000 அமெரிக்க டொலர் மதிப்புள்ள விலை உயர்ந்த பரிசுகளை பெற்ற குற்றச்சாட்டுகள் உள்ள நிலையில், அவர்களுக்கு எதிராக பல ஊழல் வழக்குகள் இஸ்ரேலில் தொடர்கின்றன.

இந்த பின்னணியில், கடந்த ஒக்ரோபரில் இஸ்ரேல் நாடாளுமன்றத்தில் பேசிய ட்ரம்ப், நெதன்யாகு மீது தொடரப்படும் வழக்குகள் அரசியல் நோக்கமுடையவை



என்றும், அவரை விடுவிப்பது இஸ்ரேலுக்கான நியாயமான முடிவு என்றும் வலியுறுத்தியிருந்தனார்.

இதன்படி, தற்போது, ட்ரம்ப் எழுதியுள்ள கடிதம் சர்வதேச அரசியலில் பெரும் அதிர்வை ஏற்படுத்தியுள்ளது.

அதில் அவர் குறிப்பிடுகையில், “குறைந்தது 3,000 ஆண்டுகளாகத் தேடப்பட்டு வந்த அமைதி தற்போது உறுதியாகி உள்ளது.

அந்த அமைதியை நிலைநிறுத்த வலிமையான தலைவராக இருந்தவர் பெஞ்சமின் நெதன்யாகு. அவரை முழுமையாக மன்னிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், இது குறித்து இதுவரை இஸ்ரேல் ஜனாதிபதி அலுவலகம் எந்த உத்தியோகபூர்வ பதிலும் அளிக்கவில்லை.

அதே நேரத்தில், நெதன்யாகு மீது தொடரப்படும் வழக்குகள் அரசியல் பழிவாங்கல் என்று அவர் மற்றும் அவரது ஆதரவாளர்கள் தொடர்ந்து கூறி வருகின்றனர்.

குறிப்பாக, கடந்த 2023 ஆம் ஆண்டு காசா போருக்கு முன் இஸ்ரேல் முழுவதும் நெதன்யாகுவுக்கு எதிராக நடைபெற்ற மாபெரும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பக்கங்கள் - 03

கனடா முரசு

வியாழக்கிழமை 13/11/2025




இந்தியா செல்பவர்களுக்கு
எச்சரிக்கை விடுக்கும் கனடா
C3




# சர்வதேச மாணவர்களுக்கு கல்வி அனுமதி; நடைமுறைகளை எளிதாக்க கனடா திட்டம்

**கனடா அரசு, 2026ஆம் ஆண்டில் இருந்து சர்வதேச மாணவர்களுக்கு கல்வி அனுமதி வழங்கும் முறையை எளிதாக்கும் புதிய திட்டத்தை அறிவித்துள்ளது.**

**இதன் மூலம் முதுகலை மற்றும் முனைவர் பட்டம் பயிலும் மாணவர்களுக்கு இனி மாகாண அல்லது பிராந்திய சான்றளிப்பு கடிதம் தேவையில்லை.**

**இந்த மாற்றம் கல்வி அனுமதி செயன்முறையை விரைவுபடுத்துவதோடு, தேவையற்ற ஆவணப் பணிகளை குறைக்கும் என அரசு தெரிவித்துள்ளது.**

**புதிய நடைமுறையின்படி, பல்கலைக்கழக ஏற்பு கடிதம் மற்றும் உயிரியளவியல் சோதனை முடிந்ததும், மாணவர்கள் இரண்டு வாரங்களில் அனுமதி பெறலாம்.**

C2

# ரஷ்யாவுக்கு எதிராக தடைகள் கனடா அரசு அதிரடித் தீர்மானம்

கனடாவின் வெளிவிவகார அமைச்சர் அனிதா ஆனந்த், ரஷ்யாவுக்கு எதிராக புதிய தடைகளை அறிவித்துள்ளார்.

நயாகரா பிராந்தியத்தில் நடைபெறும் ஜி 7 நாடுகள் குழுவின், வெளிநாட்டு அமைச்சர்களின் கூட்டத்தில் கலந்துக் கொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், உக்ரைனுக்கு எதிராக ரஷ்யா மேற்கொண்டு வரும் ஆளில்லா விமான தாக்குதல் மற்றும் இணையத் தாக்குதல்களுக்கு பின்னணியில் இருப்போர் மீது இந்த தடைகள் விதிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தடைகளை தவிர்க்கும் நோக்கில் ரஷ்யா பயன்படுத்தும் மறைமுகக் கடற்படையையும் இலக்கு வைத்து தடைகள் விதிக்கப்பட்டுள்ளதாகவும்




தெரிவிக்கப்படுகின்றது.

அத்தோடு, ரஷ்யா மீண்டும் உக்ரைனின் மின்சார வலையமைப்பை குறிவைத்து தாக்குதல் நடத்தி வரும் சூழலில், ஜி 7 வெளிநாட்டு அமைச்சர்கள், உக்ரைன் வெளிநாட்டு அமைச்சரிடமிருந்து நேரடி விளக்கத்தை கோரவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த தாக்குதல்களின் விளைவாக, உக்ரைனில் தொடர்ச்சியான மின்வெட்டு நிலைமைகள் உருவாகி உள்ளன.

குளிர்காலம் நெருங்கும் நிலையில், அமெரிக்கா தலைமையிலான தூதரக முயற்சிகள் ஸ்தம்பித்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இந்த இரண்டு நாள் மாநாட்டில் அவுஸ்திரேலியா, பிரேசில், இந்தியா, மெக்சிகோ, சவூதி அரேபியா, தென்னாபிரிக்கா மற்றும் தென்கொரியா போன்ற நாடுகளையும் கலந்துகொள்ளுமாறு அனிதா ஆனந்த் அழைப்பு விடுத்துள்ளார்.

மாநாட்டில் பங்கேற்கும் உயர்மட்ட தூதர்கள், முக்கிய கனிமங்கள், ஆற்றல் பாதுகாப்பு, மற்றும் பொருளாதார நிலைத்தன்மை போன்ற விடயங்களைப் பற்றி விவாதிக்கவுள்ளனர்.



# பொலிஸ் தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பு எடுத்தால் ஏ.ஐ. தான் பேசும்

கனடாவின் ஹால்டன் பிராந்திய பொலிஸ் அவசரமற்ற தொலைபேசி அழைப்புகளை நிர்வகிக்க தானியங்கி செயற்கை நுண்ணறிவு அமைப்பை அறிமுகப்படுத்தியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

911 அவசர அழைப்புகள் தொடர்ந்தும் மனித முகவர்கள் மூலம் மட்டுமே பராமரிக்கப்படும் எனவும், ஆனால் அவசரமற்ற அழைப்புகள் இனி "SARA (Smart Answering Routing Assistant)" எனப்படும் நுண்ணறிவு குரல் உதவியாளர் மூலம் நிர்வகிக்கப்படும் எனவும் பொலிஸார் வெளியிடப்பட்ட அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அழைப்பாளர்களிடம் சில குறுகிய கேள்விகள் கேட்டு, அவர்களின் கேள்வி அமைப்பால் தீர்க்கக்கூடியதா அல்லது நேரடி அதிகாரிக்கு மாற்ற வேண்டியதா என்பதை ளுயுசுயு தீர்மானிக்கும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த உரையாடல் நேரடியாக பதிவு செய்யப்பட்டு உரை வடிவில் மாற்றப்படும் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவசரநிலை ஏற்படும் சூழ்நிலை, அழைப்பாளருக்கு ஆங்கிலம் பேச முடியாத நிலை, மொழிபெயர்ப்பு தேவைப்படுவது, அமைப்பு கேள்வியை புரிந்து கொள்ளாதது, அல்லது சந்தேகத்திற்கிடமான நடத்தை கண்டறியப்படுமாயின், உடனடியாக அந்த அழைப்பு மனித முகவருக்கு (live agent) மாற்றப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

SARA அமைப்பின் செயல்திறனை நாங்கள் நம்புகிறோம் எனவும், தற்போது ஆண்டுக்கு சுமார் 1,60,000 அவசரமற்ற அழைப்புகள் கிடைக்கப்பெறுகின்றன எனவும் இந்த புதிய தொழில்நுட்பம் அவற்றை வேகமாக கையாள உதவும் எனவும் ஹால்டன் பிராந்திய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

---

**சர்வதேச...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேலும், இந்த திட்டத்தில் எத்தனை மாணவர்கள் விண்ணப்பிக்கலாம் என்பதில் எந்த வரம்பும் இல்லை. உலகின் எங்கிருந்தும் தகுதியுள்ள மாணவர்கள் இதில் பங்கேற்க முடியும். இதன் மூலம் மாணவர்களின் குடும்பத்தினரும் ஒரே நேரத்தில் விண்ணப்பிக்கலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, மாணவர்களின் வாழ்க்கைத்துணை திறந்த வேலை அனுமதி பெறலாம். குழந்தைகள் கல்வி அனுமதி அல்லது பார்வையாளர் விசா பெறலாம். இதனால் நீண்ட தாமதமின்றி குடும்பங்கள் ஒன்றாக கனடாவுக்கு செல்ல முடியும்.

விண்ணப்பிக்க கடவுச்சீட்டு, பல்கலைக்கழக ஏற்பு கடிதம், நிதி ஆதாரச் சான்று மற்றும் பிற ஆவணங்கள் தேவையாகும். அனைத்து விண்ணப்பங்களும் நிகழ்நிலையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

உயிரியளவியல் சோதனை முடிவுகள் 14 நாள்களுக்குள் வழங்கப்பட வேண்டும். ஆவணங்கள் முழுமையாகவும் துல்லியமாகவும் இருப்பதை உறுதிசெய்வது தாமதங்களைத் தவிர்க்க உதவும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பட்டப்படிப்புக்குப் பிறகு, மாணவர்கள் கனடாவில் வேலை செய்ய Post-Graduation Work Permit (PGWP) க்கு விண்ணப்பிக்கலாம். இது கனடாவில் வேலை அனுபவத்தை வழங்குவதுடன், நிரந்தர குடியுரிமைக்கு விண்ணப்பிக்கவும் வழிவகுக்கும்.

கல்வி அனுமதி நடைமுறையில் கொண்டு வரப்படும் இந்த மாற்றம், கனடாவை உலகளாவிய அளவில் கல்வி இலக்காகத் தேர்ந்தெடுக்கும் மாணவர்களுக்கு மிகவும் வசதியானதும் குடும்பநேசமானதுமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.



# விடுமுறைச் செலவுகளை கட்டுப்படுத்தும் கனடா

கனடியர்கள் விடுமுறை கால செலவுகளை வெகுவாக குறைப்பதற்கு தீர்மானித்துள்ளனர்.

இந்த ஆண்டில் அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவு, நத்தார் விடுமுறை காலச் செலவுகளை பெரிதும் குறைக்கும் என புதிய ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது.


ஹறிஸ் என்ட் பார்ட்னர்ஸ் உயசசளை ஸ்ரீயசவநெசள என்ற நிதி ஆலோசனை நிறுவனம் நடத்திய கருத்துக்கணிப்பின் படி, பெரும்பாலான கனேடியர்கள் இந்த ஆண்டு எளிமையான நத்தார் கொண்டாடத் தயாராகியுள்ளனர்.

1,820 பேரிடம் நடத்தப்பட்ட ஆய்வில், சுமார் 72 சதவீதம் பேர் இந்த ஆண்டில் நத்தார் செலவுகளை குறைக்க இருப்பதாக தெரிவித்துள்ளனர்.

மேலும், 62 சதவீதம் பேர் தாங்கள் பொருளாதார ரீதியாக விடுமுறை காலத்திற்குத் தயாராக இல்லை என்றும் 53 சதவீதம் பேர் நத்தார் செலவுகளைச் சமாளிக்க முடியுமா என்ற கவலையுடன் இருப்பதாகவும் கூறியுள்ளனர்.

இது கனேடியர்கள் தற்போது எதிர்கொள்ளும் நிதிச் சிக்கலின் தெளிவான அறிகுறி. அவர்கள் செலவுகளைத் தவிர்க்க விரும்பவில்லை ஆனால், உயர்ந்த வாழ்க்கைச் செலவில் அவர்களின் வரவு செலவு திட்டத்தில் கூடுதல் இடம் இல்லாததால் செலவுகளை குறைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என இந்த ஆய்வை நடத்திய நிறுவனத்தின் தலைவர் ஜோஷுவா ஹறிஸ் கூறியுள்ளார்.

அதனால், இந்த ஆண்டு கனேடியர்கள் நத்தார் கொண்டாட்டங்களை சாதாரண அளவில் நடத்துவார்கள் என பொருளாதார நிபுணர்கள் எதிர்பார்க்கின்றனர்.




# இந்தியா செல்பவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கும் கனடா

இந்தியா செல்லும் பயணிகள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு அமெரிக்கா, கனடா, பிரிட்டன் அரசுகள் அறிவுறுத்தியுள்ளன.

டில்லி கார் குண்டு வெடிப்பு சம்பவத்தை அடுத்து தமது நாட்டு மக்களுக்கு அமெரிக்கா, பிரிட்டன், கனடா ஆகிய நாடுகள் அறிவுரை வழங்கியுள்ளது.

மக்கள் அதிகம் கூடும் இடங்கள், சுற்றுலா தலங்களுக்கு செல்லும்போது எச்சரிக்கையுடன் இருக்குமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது

பிரிட்டன் மக்கள் ஜம்மு-காஷ்மீர் மாநிலத்துக்கு செல்வதை தவிர்க்குமாறும் அந்நாட்டு அரசு அறிவுறுத்தியுள்ளது.